தினமணி

**ஆம்பூர் சர்க்கரை ஆலை அரவை தொடக்கம்**

First Published : 17 Dec 2011 09:54:30 AM IST

ஆம்பூர், டிச. 16: ஆம்பூர் அருகே வடபுதுப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில், அரவை பணியை வேலூர் மாவட்ட

ஆட்சியர் எஸ்.நாகராஜன் வெள்ளிக்கிழமை தொடங்கி வைத்தார்.

கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தனி அலுவலர் திருகுண அய்யப்பதுரை, ஆம்பூர் வட்டாட்சியர் சந்திரசேகரன், தலைமை கரும்பு அலுவலர் எஸ்.சாமிநாதன், ஆம்பூர் நகரமன்ற தலைவர் சங்கீதா பாலசுப்பிரமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அதிக கரும்பு நடவு செய்த மற்றும் ஆலைக்கு அதிக கரும்பு வழங்கிய கரும்பு உற்பத்தியாளர்கள் 40 பேருக்கு பரிசுத் தொகைக்கான காசோலைகளை ஆட்சியர் வழங்கினார்.

தனி அலுவலர் பேட்டி

அரவை குறித்து தனி அலுவலர் திருகுண அய்யப்பதுரை கூறியது: ஆலையில் 31,282 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் ஆலையில் செலுத்திய பங்கு மூலதனம் ரூ.257.72 லட்சம். அரசின் பங்கு மூலதனம் ரூ.10 லட்சம்.

கடந்த 2010-11 அரவை பருவத்தில் 1,27,108 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப்பட்டு 1,14,794 குவின்டால் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த ஆண்டின் சர்க்கரை கட்டுமானம் 9.05 சதவீதமாகும். கடந்த 2010-11 ஆம் ஆண்டுக்கு டன் ஒன்றுக்கு ரூ.1,900 வீதம் கரும்பு விலை வழங்கப்பட்டது.

தற்போது 2011-12 அரவை பருவத்தில் 1.65 லட்சம் டன்கள் கரும்பு அரவை செய்து, 1,58,374 குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. சர்க்கரை கட்டுமானம் 9.60 சதவீதம் எதிர்பார்க்கப்படுகிறது.

2011-12 ஆம் அரவை பருவத்திற்கு ஏற்கெனவே 7 ஆயிரம் ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் இதுவரை பதிவு செய்யப்படாத சுமார் 500 ஏக்கர் கரும்பையும் எடுத்து அரவை செய்ய உள்ளோம் என்றார்.

**டன்னுக்கு ரூ. 3,000 கேட்டு ஆட்சியர் அலுவலகத்தில் கரும்பு விவசாயிகள் முற்றுகை**

First Published : 17 Dec 2011 09:49:56 AM IST

திருவண்ணாமலை, டிச. 16: கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,000 கேட்டு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை கரும்பு விவசாயிகள் வெள்ளிக்கிழமை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

போளூர் தரணி சர்க்கரை ஆலை நிர்வாகம் ஆலையை திறந்து உடனே விவசாயிகளின் கரும்பை அரவைக்கு எடுக்க வேண்டும். முத்தரப்பு கூட்டத்தை நடத்த வேண்டும்.

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3000 தர வேண்டும். வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகமே ஏற்க வேண்டும்.

எடை மோசடிகளைத் தடுக்க வேண்டும். தொடர்ந்து உயர்ந்து வரும் உரத்தின் விலையை கட்டுப்படுத்த வேண்டும். என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆட்சியர் அலுவலகம் முன்பு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கே.பாலமுருகன் தலைமை வகித்தார். சங்கத்தின் மாநிலச் செயலர் டி.ஏழுமலை, துணைத்தலைவர் ஏ.ஜனார்த்தனன், மாவட்டச் செயலர் எம்.சிவக்குமார் ஆகியோர் பேசினர். மாவட்டத் தலைவர் எஸ்.பலராமன், ஆர்.சிவாஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பட்டை நாமம் போட்டும், திருவோடு ஏந்தியும் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். சிலர் தலைகீழாக நடந்தனர்.

முற்றுகைப் போராட்டம்

விவசாயிகள் அனைவரும் ஆட்சியர் அலுவலகத்துக்கு சென்று கோரிக்கை மனு அளிக்க முயன்றனர். ஆனால் சங்க நிர்வாகிகள் மட்டுமே உள்ளே செல்ல வேண்டும் என போலீஸôர் தடுத்தனர். இதனால் இருதரப்புக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகள் தான் மனுக்களை அளிக்கச் செல்கிறோம். எங்களை தடுக்கிறீர்களா என போலீஸôரைக் கண்டித்து அலுவலகத்தின் அருகிலேயே முற்றுகைப் போராட்டம் நடத்தினர்.

**தொடர் மின்தடை:சாகுபடி செய்யத் தயங்கும் விவசாயிகள்**

எஸ். முகமது கஸ்

First Published : 17 Dec 2011 05:10:11 AM IST



திருவள்ளூர், டிச.16: தொடர் மின் தடை எதிரொலியால் திருவள்ளூர் மாவட்டத்தில் ஏராளமான நிலங்கள் சாகுபடி செய்யப்படாமல் தரிசாக உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் மொத்தம் 11 ஆயிரத்து 300 ஹெக்டேர் பரப்பளவில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் ஏராளமான விவசாய நிலங்கள் இருந்தாலும் அதில் பயிர் செய்யாமல் வானம் பார்த்த பூமியாகவே உள்ளது. இதற்கு முக்கியமான காரணம் மின்தடை ஆகும். கடந்தத் திமுக ஆட்சியின் போது அனைத்து விவசாயிகளும் ரூ.50 ஆயிரம் வைப்புத் தொகை செலுத்தினால் அவர்களுக்கு இலவச மின்சாரம் என அறிவித்து அதை செயல் படுத்தியது. இலவசமாக வழங்கப்பட்டாலும் மின் பற்றாக்குறையால் விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர்.

இந்நிலையில் திமுக ஆட்சியில் விவசாயத்திற்கு வழங்கப்பட்ட 12 மணி நேர மின்சாரம் அதிமுக ஆட்சியில் 8 மணி நேரமாகக் குறைக்கப்பட்டது. தற்போது அதிலும் நிலையில்லாமல் உள்ளது. இது குறித்து பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட விவசாய அணித் தலைவரும், விவசாயிகள் சங்க உறுப்பினருமான மூர்த்தி கூறியது:

கிராமப்புறங்களில் பகலில் 6 மணி நேரம், இரவில் 2 மணி நேரம் என வழங்கப்பட்ட மின்சாரம் தற்போது பகலில் 3 மணி நேரம், இரவில் 3 மணி நேரம் என குறைத்து வழங்கப்பட்டு வருகிறது.

நகர்புறங்களில் விவசாய நிலங்கள் குறைவாக இருப்பதால் ஒரு நாளைக்கு 8 முதல் 10 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது. இதனால் விவசாயம் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக 5 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் உரிமையாளர் தனது நிலத்திற்குத் தேவையான நீரை பாய்ச்ச வேண்டும் என்றால் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு 10 மணி நேரம் மின் மோட்டாரைத் தொடர்ச்சியாக இயக்க வேண்டும்.

ஏனென்றால் துவக்கத்தில் உள்ள வரப்பில் இருந்து 5 ஏக்கர் முடியும் இடத்தில் உள்ள கடைசி வரப்பு வரைக்கும் தண்ணீர் ஒரே சீராகச் சென்றால் தான் பயிர்களும் ஒரே நிலையில் ஆரோக்கியமாக வளரும். அதே போல் பம்பு செட் வசதியில்லாத விவசாயிகள் அடுத்த நிலத்தில் தண்ணீரைக் கேட்கும் போது மின் பற்றாக்குறையால் எங்களுக்கே தண்ணீர் இல்லை என பெரிய விவசாயிகள் கூறுவதால் சிறுவிவசாயிகள் விவசாயத்தை விட்டுவிட்டு மாயமாகும் நிலை ஏற்படும்.

ஏரிகளில் ஆக்கிரமிப்பு: மாவட்டத்தில் 1,600-க்கும் மேற்பட்ட ஏரிகள் உள்ளன. இதில் பெரும்பாலான ஏரிகள் ஆக்கிரமிப்புகளால் சுருங்கியுள்ளது. அனைத்து ஏரிகளும் நிரம்பினாலும் தேக்கப்படும் தண்ணீர் ஒரு போகத்துக்கு மட்டுமே பயன்படும். ஆக்கிரமிப்பில் சுருங்கியுள்ள ஏரிகளால் விவசாயத்திற்குப் பயன் இல்லாமல் உள்ளது.

மேலும் மழைக் காலத்தில் ஏரி நிரம்பி தங்களுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடாது என ஆக்கிரமிப்பாளர்கள் பலர் ஏரியின் ஏதாவது ஒரு பகுதியில் உடைப்பை ஏற்படுத்தி தண்ணீரை வெளியேற்றி விடுகின்றனர். எனவே ஏரி பாசன விவசாயிகளின் நலன் கருதி ஏரி ஆக்கிரமிப்புகளை அகற்ற தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் மூர்த்தி.

விவசாய பயன்பாட்டிற்கு ஏற்பட்டுள்ள மின்பற்றாக்குறை குறித்து மின்வாரிய உயர் அதிகாரிகளை கேட்ட போது, விவசாய பயன்பாட்டுக்கு பகலில் 6 மணி நேரம், இரவில் 2 மணி நேரம் என மின்சாரம் வழங்கப்படுகிறது. விரைவில் 10 மணி நேர மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது என்றனர்.

**கிருஷ்ணகிரி அணைக்கட்டுப் பகுதியில் நெல் கதிரடிக்கும் களம் அமைக்கக் கோரிக்கை**

First Published : 17 Dec 2011 09:52:26 AM IST

கிருஷ்ணகிரி, டிச. 16: கிருஷ்ணகிரி அணைக்கட்டுப் பகுதியில் நெல் கதிரடிக்கும் களம் அமைக்க வேண்டும் என்று அகில பாரதிய விவசாயிகள் சங்கம் மாவட்ட நிர்வாகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கத்தின் மாவட்டத் தலைவர் துரை. இராமசந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கை:

கிருஷ்ணகிரி அணையின் வலது, இடது கால்வாய் பாசனத்தில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், கதிர் அடிக்க களம் இல்லாமல் அவதிப்படுகின்றனர். சாலைகளையே இப்போது களமாகப் பயன்படுத்தி கதிரடிக்கின்றனர். இதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுகிறது.

எனவே, முத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், பையூர், தளிப்பட்டி, மாரிசெட்டிஅள்ளி ஆகிய ஊராட்சிகள், நாகரசம்பட்டி பேரூராட்சி மற்றும் பாரூர் பெரிய ஏரி பாய்ச்சல் பகுதி விவசாயிகள் பயனடையும் வகையில் கதிர் அடிக்கும் களங்களை அமைக்க வேண்டும்.

தானியங்களைச் சேமித்து வைக்க வசதியாக, அணைப்பகுதியில் கிடங்குகளை அமைக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கோழிகளை ஈரல் அழற்சி நோய் தாக்கும் அபாயம்**

First Published : 17 Dec 2011 11:26:32 AM IST

நாமக்கல், டிச.16: கோழிகளை ஈரல் அழற்சி நோய் தாக்கும் அபாயம் உள்ளதாக நாமக்கல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வானிலை ஆலோசனை மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அம் மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

அடுத்த நான்கு நாள்களுக்கான நாமக்கல் மாவட்ட வானிலையில் வடகிழக்கு பருவமழை வங்காளவிரிகுடாவில் மிதமான அளவில் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் கடலோர மாவட்டங்களில் கனமழையும் உள்மாவட்டமான நாமக்கல்லில் லேசான மழையும் பெய்யும். இம் மழையானது, டிசம்பர் மாதத்திற்கான இயல்பான வெப்பநிலையை பகலில் 86 டிகிரி பாரன்ஹீட்டாகவும், இரவில் 66.2 டிகிரி பாரன்ஹீட்டாகவும் வைத்துக் கொள்ள உதவும்.

தற்போது நிலவி வரும் தட்ப வெப்பநிலை கோழிகளுக்கு மிகவும் சாதகமாக இருக்கிறது. இரவு வெப்பம் குறைவதற்கான வாய்ப்பில்லை. இதனால் தீவன எடுப்பு உயராது. பகல் வெப்பம் 86 டிகிரி பாரன்ஹீட்டுக்கு மேல் உயராமல்

மேகமூட்டம் தடுப்பதால் சாதாரணமாக டிசம்பர் மாதத்தில் ஒவ்வொரு ஆண்டும் நிலவும் வெப்பத் தாக்குதலுக்கான வாய்ப்பில்லை.

கடந்த வாரம் கோழியின நோய் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழிகள் பெரும்பாலும் ஈரல் அழற்சி, இறக்கை அழுகல் நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது. ஈரல் அழற்சி நோய் தீவனத்தில் உள்ள நச்சால் வர வாய்ப்புள்ளது. எனவே பண்ணையாளர்கள் தீவனத்தைப் பரிசோதித்த பிறகே உபயோகப்படுத்த வேண்டும். குளிர்காலம் என்பதால் இறக்கை அழுகல்

நோய் வராமல் தடுக்க கால்நடை மருத்துவரின் ஆலோசனையின்படி பராமரிப்பு முறைகளை மேற்கொள்ளவேண்டும்.

விவசாயிகளுக்கான ஆலோசனை: தற்போது மரவள்ளி கிழங்கு அறுவடைக்கு தயாராக உள்ளது. இப்போது நிலவும் சீதோஷ்ணநிலை சாதகமாக இருப்பதால், மரவள்ளி கிழங்கு அறுவடையை விரைவில் துவங்க விவசாயிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாமக்கல் வேளாண் ஆலோசனை மையம் கேட்டுக் கொண்டுள்ளது.

**பயறு வகை பயிர்களுக்கு மானிய விலையில் உர விற்பனை**

First Published : 17 Dec 2011 11:06:31 AM IST

பரமத்தி வேலூர்,டிச.16: பரமத்தி வேளாண்மை விரிவாக்க மையத்தில் பயிறு வகை பயிர்களுக்கு மானிய விலையில் உரம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பரமத்தி வேளாண்மை உதவி இயக்குனர் க.வீரப்பன் கூறியது: பரமத்தி வட்டாரம் வேளாண்மை விரிவாக்க மையத்தின் மூலம் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயறு வகை பயிர்களுக்கு டி.ஏ.பி உரம் 1 ஏக்கருக்கு 25 கிலோ ரூ.250 மானியத்தில் வழங்கப்படவுள்ளது. எனவே பயறு வகை பயிர்கள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அந்தந்த பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொண்டு மானிய விலையில் டி.ஏ.பி. உரம் பெற்று பயன்படுத்துமாறு தெரிவித்துள்ளார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**விவசாயிகள் பெயரில் வங்கிகளில் கடன் : குறைகேட்புக் கூட்டத்தில் புகார்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2011,00:44 IST

கருத்தை பதிவு செய்ய

கடலூர் : ""விவசாயிகள் பெயரில் ஆலை நிர்வாகம் வாங்கியுள்ள கடனால் எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு பாதிப்பின்றி இருக்க ஆலை நிர்வாகம் உத்தரவாதம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என விவசாயிகள் பேசினர். விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் மாவட்ட வளர்ச்சி மன்ற கூடத்தில் நடந்தது. கலெக்டர் அமுதவல்லி தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியதாவது:

ரவீந்திரன்: சிதம்பரம் புறவழிச்சாலை அமைத்ததால், கண்ணங்குடி, கீழ்நத்தம், ஆடூர் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள நிலங்களில் தண்ணீர் வடிய வழியின்றி பயிர்கள் சேதமடைகின்றன.

கலெக்டர்: அப்பகுதிகளில் தண்ணீர் வடிய பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

வேல்முருகன்: தக்கை பூண்டு விதையை தேவைக்கேற்ப வேளாண் துறை இருப்பு வைக்க வேண்டும்.

சோமசுந்தரம்: வெலிங்டன் ஏரியில் பாசனத்திற்கு தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்படுமா?

பொதுப்பணித்துறை அதிகாரி: தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இன்னும் 110 நாட்களுக்கு பிரச்னை இருக்காது.

வெங்கடேசன்: கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் வழங்கப்படுமா? அம்பிகா சர்க்கரை ஆலை, விவசாயிகள் மீது வங்கியில் கடன் பெற்றுள்ளது. இந்தக் கடனை ஆலை நிர்வாகம் கட்டுவதற்கான உத்தரவாதத்தை வழங்க கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொதுப்பணித்துறை அதிகாரி: கடைமடை வரை தண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கலெக்டர்: சர்க்கரை ஆலை தொடர்பாக விவசாயிகள் பல்வேறு பிரச்னைகளை எழுப்பியுள்ளதால் ஆலை நிர்வாகம், விவசாயிகள் அடங்கிய கூட்டம் நடத்தப்படும்.

**தட்டுப்பாடின்றி உரம் வழங்க வேண்டும்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2011,01:51 IST

கருத்தை பதிவு செய்ய

சேலம்: "தனியார் விற்பனை நிலையங்களில் எளிதில் உரம் கிடைக்கும் நிலையில், கூட்டுறவு சங்கங்களில் உரம் தட்டுப்பாடு நீடித்து வருகிறது. எனவே, தட்டுப்பாடின்றி, கூட்டுறவு சங்கங்களில் உரம் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, குறைதீர் கூட்டத்தில், விவசாயிகள் வலியுறுத்தினர்.சேலம், கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறை தீர் கூட்டம், டி.ஆர்.ஓ., பிரசன்னவெங்கடேசன் தலைமையில் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) உதயகுமார், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செங்குட்டுவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், தேசிய நூறு நாள் வேலை வாய்ப்பு திட்டத்தால், விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. நூறு நாள் வேலை உறுதி திட்டத்தின் செயல்பாடுகளை, அறுவடை காலங்களில் நிறுத்தி வைப்பதால், அறுவடைக்கு ஆட்கள் கிடைக்க வாய்ப்புள்ளது.வேளாண்மை சம்பந்தமான குறைகளை விவசாயிகள் அளித்தால், மேல் அதிகாரிகளுக்கு மனுக்களை கொண்டு செல்லாமல், கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் மூடி மறைத்து விடுகின்றனர். இதனால், விவசாயிகள், வேளாண்மை சம்பந்தமான பிரச்னைகளுக்கு தீர்வுகாண முடியாத நிலை உள்ளது.

சேலம் மாவட்டத்தில், தனியார் விற்பனை நிலையங்களில், உரம் எளிதில் கிடைக்கிறது. ஆனால், கூட்டுறவு சங்கங்களில், தட்டுப்பாடு உள்ளது.கூட்டுறவு சங்கங்களில், உரம் தட்டுபாடின்றி கிடைக்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக அரசு, விவசாயிகளுக்கு இரண்டு லட்சம் இலவச மின்சார இணைப்பு வழங்குவதாக தெரிவித்தது. இதை நம்பி, விவசாயிகள் கடனுக்கு மின் மோட்டார்களை வாங்கி வைத்துள்ள நிலையில், இலவச மின்சார இணைப்பு வழங்குவதில் மெத்தனம் காட்டி வருகின்றனர். எனவே, இலவச மின்சார இணைப்பு வழங்க, தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.குடியரசு தினம்,

சுதந்திர தினத்தில், விவசாயிகளை கவுரவித்து பாராட்டு சான்றிதழ் அளிப்பதன் மூலம், இளைய தலைமுறையினர், விவசாய பணியில் ஈடுபட ஆர்வம் காட்டுவர்.கரியகோவில் அணை, புழுதிக்குட்டை அணைகளில் நீர் திறப்பு வரைமுறை படுத்தப்படாமல் உள்ளது. எனவே, இந்த அணைகளில், தண்ணீர் திறந்து விடும் கால அளவை, மாவட்ட நிர்வாகம் வரைமுறைபடுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை, விவசாயிகள் முன்வைத்து பேசினர்.

**சொட்டுநீர் பாசனம் அமைக்கரூ.43 ஆயிரம் மானியம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2011,02:09 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: "சொட்டுநீர் பாசனம் அமைக்க, சிறு, குறு விவசாயிகளுக்கு அதிகபட்ச மானியமாக, 43 ஆயிரத்து 816 ரூபாய் வழங்கப்படும்' என, மாவட்ட கலெக்டர் குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீத மானியத்திலும், இதர விவசயிகளுக்கு, 75 சதவீத மானியத்திலும் சொட்டுநீர் பாசனம் அமைக்க, முதல்வர் உத்தரவிட்டுள்ளார். விவசாயத்துக்கு, சிக்கனமாக தண்ணீரை உபயோகிக்க, இத்திட்டம் பயனாக இருக்கும்.

எனவே, நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள், இவ்வாய்ப்பை பயன்படுத்தி, குறைந்த தண்ணீரில் கூடுதல் பரப்பில் சாகுபடி செய்து, நிறைந்த மகசூல் பெறலாம்.இத்திட்டத்தின் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு அதிகபட்ச மானியமாக, 43 ஆயிரத்து 816 ரூபாய் வழங்கப்படும்.

திட்டத்தில், பெண்கள், எஸ்.சி., எஸ்.டி., விவசாயிகள், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். திட்டத்தின் கீழ் குத்தகைதாரர்கள் பயன்பெறலாம். மேலும், குழுக்கள் அமைத்து குழுவாகவும் செயல்படலாம்.திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பு பயனாளிகள், சிறு மற்றும் குறு விவசாயி என்பதற்கான, ஆர்.ஐ., கையெழுத்திட்ட சான்று, ஆர்.டி.ஓ., கையெழுத்திட்ட சான்று, வி.ஏ.ஓ., கையெழுத்துடன் கூடிய அடங்கல், வயல் அளவு புத்தகம், குத்தகைதாரராக இருந்தால், பத்தாண்டுக்கான குத்தகைப் பத்திரம், மூன்று பாஸ்போர்ட் ஃபோட்டோ, ரேஷன் கார்டு ஜெராக்ஸ் உள்ளிட்டவையுடன், தோட்டக்கலை உதவி இயக்குனர்களை தொடர்பு கொண்டு விவரம் கேட்டுப் பெறலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2011,23:07 IST

கருத்தை பதிவு செய்ய

திண்டுக்கல் : தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி மையத்தில், விவசாயிகளுக்கு ஏழு நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. கொடைக்கானல் வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் செல்வராஜ் கூறியது: தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி மையத்தில், பயிர்பாதுகாப்பு கருவிகளை தேர்ந்தெடுத்தல், இயக்குதல், பராமரித்தல் முறைகள் பற்றிய பயிற்சி நாளை முதல் டிச., 26 வரை நடக்கிறது. பங்கேற்க விருப்பம் உள்ள கொடைக்கானல் ஒன்றிய விவசாயிகள், மூஞ்சிக்கல் வேளாண் பொறியியல் துறை அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். இதில் 20 விவசாயிகளுக்கு மட்டுமே பயிற்சிஅளிக்கப்படும்.

**எண்ணெய் பனை சாகுபடிக்கு அரசு மானியம் வழங்கல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 17,2011,03:40 IST

கருத்தை பதிவு செய்ய

தென்காசி : "எண்ணெய் பனை சாகுபடிக்கு அரசு மானியம் வழங்குகிறது' என தென்காசி வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: எண்ணெய் பனை மேற்கு ஆப்பிரிக்காவை சேர்ந்த ஒரு பயிராகும். இம்மரத்தில் பழச்சாற்றிலிருந்தும், கொட்டைகளிலிருந்தும் எண்ணெய் எடுக்கப்படுகிறது. உலகளவில் பாமாயில் பயன்பாட்டில் 17 சதவீதம் இந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது. இந்தோனேசியா மற்றும் மலேசியா நாடுகள் தலா 40 சதவீதம் பாமாயிலை உற்பத்தி செய்கிறது.

உலகளவில் 44 சதவீதம் பாமாயில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தியாவில் குறைந்த அளவில் பாமாயில் மரம் சாகுபடி செய்யப்பட்டு வந்த போதிலும் பாமாயில் தேவை அதிகரித்து வருகிறது. நமது நாட்டில் ஒரு லட்சத்து 71 ஆயிரம் எக்டேர் பரப்பில் எண்ணெய் பனை பயிர் செய்யப்பட்டு 66 ஆயிரம் டன் பாமாயில் உற்பத்தி செய்யப்படுகிறது. நம் நாட்டில் ஆண்டுதோறும் 80 லட்சம் டன் பாபாயில் பயன்படுகிறது.

உள் நாட்டில் எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மற்ற எண்ணெய் வித்து பயிர்களை காட்டிலும் அதிகளவில் எக்டருக்கு 4 ஆயிரத்து 500 கிலோ எண்ணெய் தரவல்ல எண்ணெய் பனை சாகுபடியை பரவலாக்க அரசு பல்வேறு மானிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. புதிதாக சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பல்வேறு இனங்களில் 1 லட்சத்து 21 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. எண்ணெய் பனை கன்றுகளுக்காக 10 ஆயிரம் ரூபாய், முதலாமாண்டு செலவினங்களுக்காக 6 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. சொட்டு நீர் பாசனம் அமைக்க எக்டேருக்கு 15 ஆயிரம் ரூபாய், டீசல் அல்லது எலக்ட்ரிக் மோட்டார் வாங்குவதற்கு 10 ஆயிரம் ரூபாய், புதிதாக ஆழ்குழாய் கிணறு ஏற்படுத்த 50 ஆயிரம் ரூபாய், ஊடு பயிர் சாகுபடிக்கு இடுபொருட்கள் வாங்க 10 ஆயிரம் ரூபாய், உர செலவு, மருந்து செலவு, நீரில் கரையும் உரம் வாங்க செலவு போன்றவற்றிற்கு 5 ஆயிரம் ரூபாய், மண்புழு உற்பத்தி மையம் அமைக்க 15 ஆயிரம் ரூபாய் மானியமாக விவசாயிக்கு வழங்கப்படுகிறது. ஐசோபாம் எண்ணெய் வித்து திட்டத்தின் கீழ் எண்ணெய் பனை பராமரிப்பிற்கு தேவையான இடுபொருட்கள் ஓர் எக்டேருக்கு இரண்டாமாண்டு 2 ஆயிரத்து 450 ரூபாய், மூன்றாமாண்டு 2 ஆயிரத்து 800 ரூபாய் மற்றும் நான்காமாண்டு 3 ஆயிரத்து 200 ரூபாய் மானியத்தில் அளிக்கப்படுகிறது. தென்காசி வட்டாரத்தில் இதுவரை சுமார் 25 எக்டேர் பரப்பில் கீழப்புலியூர், தென்காசி, குத்துக்கல்வலசை, கணக்கப்பிள்ளைவலசை, வடகரை கிராமங்களில் எண்ணெய் பனை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அரசு அளிக்கும் மானியத்தை பயன்படுத்தி எண்ணெய் பனை சாகுபடியை விவசாயிகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் அறிக்கையில் கூறியுள்ளார்.

**நெல் கொள்முதல் மையம் விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2011,23:37 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் : "காங்கயம் பகுதியில் நெல் கொள்முதல் மையம் துவக்க வேண்டும்,' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். திருப்பூர் மாவட்டத்தில் காங்கயம், உடுமலை, மடத்துக்குளம், தாராபுரம் சுற்றுப்பகுதிகளில் நெல் விளைவிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஜன., முதல் நெல் அறுவடை நடைபெறும். மாவட்டத்தின் பல பகுதிகளில் உள்ள விவசாயிகள் நெல்லை அந்தந்தப் பகுதியில் உள்ள அரிசி ஆலைகளுக்கு கொண்டு சென்று அரைத்து பயன்படுத்துகின்றனர். சிலர்,

தனியார் அரிசி ஆலைகளுக்கு விற்கின்றனர். பெரும்பாலான விவசாயிகள், அரசு கொள்முதல் மையங்களுக்குவிற்கின்றனர்.

திருப்பூர் மாவட்டத்தில் நிரந்தர நெல் கொள்முதல் மையம் இல்லாததால், ஆண்டுதோறும் அறுவடை காலங்களில் தற்காலிக கொள்முதல் மையம் அமைத்து, அரசு கொள்முதல் செய்கிறது. கடந்தாண்டு காங்கயம் தாலுகாவுக்கு உட்பட்ட பரஞ்சேர்வழி, வள்ளியரச்சல் ஆகிய இடங்களில் தற்காலிக மையங்கள் துவங்கப்பட்டன. ஜூலை மாதம் அம்மையங்கள் மூடப்பட்டன. அடுத்த மாதம் மீண்டும் நெல் அறுவடை துவங்க உள்ள நிலையில், அம்மையங்களை மீண்டும் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் சங்கமும், காங்கயம் எம்.எல்.ஏ.,வும், மாவட்ட நிர்வாகம் மற்றும் நுகர்பொருள் வாணிப கழகத்துக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.அப்பகுதிகளில் உரிய இடம் தேர்வு செய்து கொள்முதல் மையம் அமைக்கப்படும் என்று நுகர்பொருள் வாணிப கழக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் அவர்கள் கூறுகையில், "தற்போது உடுமலை பகுதியில் மடத்துக்குளம் மற்றும் வேலபதி ஆகிய இடங்களில் கொள்முதல் மையங்கள் துவங்கப்பட்டுள்ளன. காங்கயம் பகுதியில் கொள்முதல் மையம் துவங்கினால், தினமும் 700 மூட்டை அளவிலான நெல் கொள்முதல் செய்யப்பட்டு, அதே நாளில்அங்கிருந்து வாணிப கழக கிடங்குக்கு கொண்டு செல்லப்படும்.

உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்ய வேண்டிய நிலை உள்ளது. பணம் மற்றும் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் ஆகியவற்றுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்படும் வகையில் இடம் தேர்வு செய்து, நெல் கொள்முதல் மையம் அடுத்த மாதம் துவங்கப்படும்,' என்றனர்.

**விதை கிராம திட்டப்பயிற்சி முகாம் வேளாண் உதவி இயக்குனர் பங்கேற்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 16,2011,23:48 IST

கருத்தை பதிவு செய்ய

மண்ணச்சநல்லூர்: மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் வலையூர் கிராமத்தில் பயிறுவகை பயிர்களுக்கான விதை கிராம திட்டப்பயிற்சி முகாம் நடந்தது.

மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் 13 கிராமங்கள் பயிர்சாகுபடி அடிப்படையில் விதை கிராமத்திட்ட பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளன. வலையூரில் நடந்த துவக்க முகாமிற்கு பஞ்சாயத்து தலைவர் அன்னகாமு தலைமை வகித்தார். நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்து வட்டார

வேளாண் உதவி இயக்குனர் சந்தான கிருஷ்ணன் தெரிவித்ததாவது:ஒவ்வொரு கிராமத்திலும் 100 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு விதை உற்பத்தி மற்றும் விதை பயிர் சாகுபடி குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக விவசாயிகளுக்கு தேவையான விதை நெல்லில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் மட்டுமே அரசுத்துறையினரால் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

எஞ்சிய விதைகள் தனியார் விதை உற்பத்தியாளர்களாலும், விவசாயிகள் உற்பத்தி செய்து வரும் சொந்த விதைகளினாலும் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றது. இம்மாதிரியாக விவசாயிகள் சொந்தமாக விதை உற்பத்தி செய்யும் போது விதைச்சான்று துறையினரது தொழில் நுட்பங்களை கடைபிடித்தால் தரமான விதைகள் காலத்தே கிடைக்கும்படி செய்திட வாய்ப்பாகும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.முகாமில் வேளாண் துணை இயக்குனர் (மத்திய திட்டம்) சந்திரசேகர் பேசியதாவது:இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி, மான்யவிலையில் உளுந்துப்பயிறுவகை விதைகள் மற்றும் உயிர் உரங்கள் அனைத்தும் வழங்கப்பட்டு வருவதை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி மகசூலினை இரட்டிப்பாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மண்மாதிரி எடுத்தலின் அவசியம்பற்றி வேளாண் அலுவலர் காசி விஸ்வநாதன் எடுத்துரைத்தார். முகாமில் பங்கேற்ற விவசாயிகளுக்கு சான்றுவிதை மற்றும் ஆதாரநிலை விதை உற்பத்தி பற்றிய தொழில்நுட்ப செய்திகள் அடங்கிய சாகுபடி கையேடு வழங்கப்பட்டது.ஏற்பாடுகளை துணைவேளாண் அலுவலர் (பொ) மருததுரை, உதவிவேளாண் அலுவலர்கள் ராஜராஜன், பாஸ்கரன் ஆகியோர் செய்திருந்தனர்.